**தலைப்பு 108 – தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 308 | தபால் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 9,252,480,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 9,202,780,670 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 46,034,504 இற்கும் ரூபா 3,664,826 இற்கும் இடையிலான அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 17 சதவீதம் மற்றும் 0.04 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 108 | 263,980,000 | 217,945,496 | 46,034,504 | 17.4 |
| 308 | 8,988,500,000 | 8,984,835,174 | 3,664,826 | 0.04 |
| மொத்தம் | 9,252,480,000 | 9,202,780,670 | 49,699,330 | 0.53 |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 01 இற்காக ரூபா 4,650 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 5,907 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 127 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | வருமான மிகை | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 20-01-02-00 | 4,650,000,000 | 5,907,433,288 | 1,257,433,288 | 27 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10801 | 5,000,000 | 3,618,150 | 1,900,000 | 5,899,935 | 30,000,000 | 12,972,181 |
| 30801 | 700,000,000 | 647,668,786 | 480,000,000 | 564,997,741 | 2,700,000,000 | 1,765,042,937 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 713,752,397 ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|

| | | மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தபால் சேவைகள் அமைச்சு | 7002-349-13 | 657,172 |
| தபால் திணைக்களம் | 7002-0000-00-098-0012-000 | - |
| | 7002-0000-00-098-0013-000 | 713,095,225 |
| மொத்தம் | | 713,752,397 |

## 2.4.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,976,957 ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தபால் சேவைகள் அமைச்சு | 6000/0000/00/0015/0022/000 | 8,654,519 |
| தபால் திணைக்களம் | 6000/0000/00/0015/0162/000 | 45,322,438 |
| மொத்தம் | | 53,976,957 |

## 2 ஆம் பகுதி

### ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 108 – தபால் சேவைகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தபால் சேவைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 07 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தபால் சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 8 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

(iii) அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேவையானவற்றை திட்டமிட்டு அதன் மூலம் தேவைகளை இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 18 செலவின விடயங்களில் ரூபா 5,311,000 தொகையான நிதி ஏற்பாடு நி.பி 66 இன் மூலம் 16 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் 06 செலவின விடயங்களுக்காக ரூபா 3,950,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

(iv) 05 செலவின விடயங்களில் ரூபா 43,917,369 தொகையான சேமிப்பு தொடர்பாக காண்பிக்கப்பட்ட விளக்கமளித்தல்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்களுக்கு இணங்க ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 645,815 ஆக இருந்தது. இதில் 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 16,740 மீதியும் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,075 மீதியும் உள்ளடங்கியிருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 108011 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 249,224 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது. இந்த மீதிகளில் ரூபா 246,674 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுவதுடன் ரூபா 2,550 தொகை 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் கொண்டுவரப்படுகின்றது.

(ii) இட மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாக ரூபா 42,833 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதும் அந்த மீதி பெறுவதற்குள்ள கடன் தொடர்பான காலப்பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் புத்தகங்களின் படி கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதி ரூபா 10,633,926 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் படி மீதி ரூபா 10,129,610 ஆக இருந்தது. அதன் படி அமைச்சின் புத்தகங்களின் படியும் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் படியும் ரூபா 534,316 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாடு 2004 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற மீதியாகும். எனினும், இந்த வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணங்களின் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 11,558,493 ஆக இருந்ததுடன் கட்டுப்பாட்டுக் கணக்கின்படி மீதி ரூபா 10,663,926 ஆக இருந்தது. அதன் படி ரூபா 894,567 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த

வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 பெப்ரவரி 07 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.4.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 இன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பின்வரும் கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) மூலதனச் சொத்துக்களைக் கைப்பற்றல், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவைப் பரிசோதித்தல்

(ii) முத்திரை மேம்படுத்துதல் நடவடிக்கைகளின் எதிர்பார்த்த பணிகள் மற்றும் இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருந்ததா என பரீட்சித்தல்

(iii) தபால் வலையமைப்பை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தினை பரீட்சித்தல்

(iv) தனிப்பட்ட ஆளணிக் கோவைகளைப் பரீட்சித்தல்

(v) மனித வள அபிவிருத்தி அமைச்சின் பதவியணியினர் பயிற்சியளித்தலைப் பரீட்சித்தல்

(vi) கொள்வனவு நடவடிக்கைகளின் மீளாய்வு

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்கள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி முறைமைக்

கணக்காய்வொன்றை மேற்கொண்டு உள்ளகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வலுப்படுத்துவதற்கு பங்களித்திருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களாகச் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கிடையே பட்டதாரி பயிலுனர் உத்தியோகத்தர்கள் இருந்ததுடன் அவர்களின் அனுபவம், திறன்கள், பொறுப்புகள் மற்றம் தொழில் தர்மம் தொடர்பாக போதியளவான பயிற்சிகளை வழங்குவதற்காக உள்ளக அல்லது வெளி பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 05 கணக்காய்வு உதவி உத்தியோகத்தர்களாக இருந்த போதிலும் உள்ளபடியான அளவு 04 ஆக இருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

மலைநாட்டு அபிவிருத்திப் பிரிவிற்குரியதாகக் காணப்பட்ட வாகனமொன்று கையேற்கப்படாமல் அமைச்சால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்களை அகற்றுதல்

--------------------------------------------------------------------------

2004 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்ட இரண்டு (02) வாகனங்களின் கிரயத்தை அகற்றுதலின் கீழ் காண்பிக்க வேண்டிய போதிலும் அந்த இரண்டு (02) வாகனங்களினதும் விற்பனைப் பெறுமதியான ரூபா 1,657,400 தொகை ஆண்டின் அகற்றுதலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

-----------------------------------------------

அமைச்சால் நிதிப்பிரமாணம் 94(i) இன் பிரகாரம் நடப்பாண்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகை அதற்காக போதியளவாக இருக்கும் போது மாத்திரமே கடப்பாடாக இருக்க முடியுமான போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாட்டு எல்லையினை விஞ்சி 18 செலவின விடயங்களிற்காக ரூபா 1,600,375 தொகையினால்

பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தச் செலவினங்கள் 2014 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளிலிருந்து தீர்க்கப்பட்டிருந்தது.

## 1.6 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | 1997 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 353(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் (ii) ஆம் பந்தி | 13,383,462 | மீளாய்வாண்டின் போது அமைச்சால் 10 வாகனங்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கையுடன் தகைமை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | 41,996,012 | பார்கோட் வாசிப்பு இயந்திரத்தை கொள்வனவு செய்தல் மற்றும் 275 கணனிகள் மற்றும் அதற்குரிய உப பாகங்களைக் கொன்வனவு செய்தல் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்த கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை |

## 1.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் நலிவுகள்

---

### தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டம்

---

தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2007 ஒக்தோபர் 31 ஆந் திகதிய 12/2007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் படி வருமானம் சேகரிக்கும் முறையான திட்டமொன்றை தாபித்தல், புதிய தொழில் முயற்சி நடவடிக்கைகளிலிருந்து வருமானம் உழைக்கும் உபாயமொன்றை தாபித்தல், தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டம் பெறுவதைத் தடுத்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணுதல் மற்றும் நோக்கத்தை அடைதல் என்பன எதிர்பார்க்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 300 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 165 மில்லியனாக இருந்த போதிலும் அதில் ரூபா 125.41 மில்லியன் அதாவது மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 76 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் பிரதான இரண்டு பணிகளான தரவு நிலையத்தை ஏற்படுத்துதல் மற்றும் அனர்த்த மீளமைப்பு பிரிவு வசதிகளை தாபித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஆலோசனையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 16 மொடியூல்களை பிரயோகரீதியில் அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளின் அடிப்படையில் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் தரவு நிலையத்தை தாபிப்பதற்கு பதிலாக திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவை வலுப்படுத்தி குறைந்த செலவிலான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக 2014 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நடவடிக்கைகள் 2014 திசெம்பர் மாதம் வரையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இந்த செயற்திட்டத்தின் மூலம் தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டம் அடைவதைத் தடுத்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணிச்

செல்லுதல் தொடர்பான நோக்கத்தை மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,859 மில்லியன் நட்டத்தை திணைக்களம் பெற்றிருந்தது.

**1.8 சபைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------------------

சனாதிபதி செயலகத்தின் 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டை சிக்கனமாகவும் உயர் செயற்திறனுடையதாகவும் உபயோகிப்பதற்காக அரசாங்க நிறுவனம் அரசாங்கத்திற்குரிய கட்டிடங்களில் இயலுமானவரையில் பேணவேண்டியிருந்தமை சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தும் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் பேணிச்சென்ற பிரதி அமைச்சர் அலுவலகத்திற்காக தனியார் கட்டிடமொன்று ரூபா 500,000 மாதாந்த வாடகையில் 2013 நவம்பர் 18 ஆந் திகதி கூறுவிலை கோரப்படாமல் பெறப்பட்டிருந்தது.

**1.9 நட்டமும் இழப்பும்**

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2008 செப்தெம்பர் 01 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 815,000 தொகையான களஞ்சியத்தின் இருப்புப் பற்றாக்குறையை இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 271,668 தொகையான தவனைப்பணமாக அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 57,729 தொகை அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 543,332 பணத்தை அறவீடு செய்யவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதிவரையில் எந்தப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.10 மனிதவள முகாமைத்துவம்**

-----------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

-----------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 12 | 12 | - |
| மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| இரண்டாம் நிலை | 52 | 45 | 07 |
| ஆரம்ப நிலை | 28 | 25 | 03 |
| ஏனையவை(அமைய) | 04 | 03 | 01 |
| மொத்தம் | 99 | 87 | 12 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

## 2. தலைப்பு 308 – தபால் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தபால் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 05 ஆம் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 தொடக்கம் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிகை ஏற்பாடு செய்யப்பட்டமை காரணமாக 11 செலவின விடயங்களுக்குரிய ரூபா 59,020,900 தொகையான நிதி ஏற்பாடு நி.பி 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 34,707,258 தொகையான 140 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

(ii) விஸ்வ தபால் நிதியத்திலிருந்து 2011 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 27,255,850 தொகைக்குரிய செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,319,665 தொகை பயன்படுத்தப்படாமல் 2014 பெப்ரவரி 03 ஆந் திகதி விஸ்வ தபால் சங்கத்திற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

(இ) வருமானக் கணக்கு

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் படி ரூபா 112,721,537 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையான வருமானம் 01 வருடம் முதல் 06 வருடங்களிற்கிடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாகும். அந்த நிலுவை வருமானங்களை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையில் ‘‘மின்சாரப்பட்டியல் தரகு’’ நிலுவை வருமானம் ரூபா 61,942,522 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வியாபார தபால் பிரிவின் மூலம் கணக்காய்விற்காக வழங்கப்பட்ட வியாபார தபால் நிலுவை வருமானம் ரூபா 61,071,857 ஆக இருந்த போதிலும் அது ரூபா 21,642,176 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த தபால் நிலுவை வருமானம் மற்றும் விடுவிப்பு தபால் நிலுவை வருமானம் முறையே ரூபா 14,388,168 மற்றும் ரூபா 139,727,846 ஆக ரூபா 154,116,014 கூட்டுத்தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 179,579,667 கூட்டுத்தொகை சர்வதேச தபால் நிலுவை வருமானமாக மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக சர்வதேச தபால் நிலுவை வருமானமாக ஆண்டின் இறுதியின் போது வெளிப்படுத்தப்பட்ட பெறுமதி சரியானதாக இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(vi) தொலைத் தொடர்பு இல்லங்களின் இலாபம் கணிக்கப்பட்டு அந்த வருமானத்தை வருமானமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 35,262,146 தொகை நானாவித வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கம்பஹா தொலைத் தொடர்பு இல்லத்தின் வருமானம் மாத்திரம் அதாவது ரூபா 63,240 தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இணக்கக் கூற்று தயாரிக்கும் போது வரவு மீதியின் ஆகக் கூடிய எல்லை 308012 இன் கீழ் காண்பிக்கப்பட்ட வரவு மீதியையும் உள்ளடக்கி காண்பிக்க வேண்டிய போதிலும் ரூபா 278,562 தொகையான அந்த மீதி எல்லைக்கு உரித்தற்றதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 30801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின்படி அறவீடுகள் நிலுவையாக இருந்த 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,431,469 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

(iii) களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் கடன் முற்பணம் செலுத்தும் போது இடம்பெற்ற ரூபா 290,000 தொகையான நிதி மோசடி, தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் வெளிப்படுத்தப்படாமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வரவு மீதி அத்தொகையால் அதிகரித்து அதாவது ரூபா 1,765,283,132 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) மட்டக்களப்பு மாவட்ட கணக்கு அலுவலகத்தின் தனிப்பட்ட கணக்கு மீதிகளுக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுக்குமிடையே ரூபா 258,262 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**2.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாவாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.4.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மத்திய தபால் பரிமாற்ற வியாபார தபால் வருமானப் பரிசோதனை, தபால் முத்திரை இயந்திரப் பிரிவின் பரிசோதனை, சர்வதேச தபால் நடவடிக்கைகள், பதிவுத் தபால் பிரிவின் நடவடிக்கைகள் மற்றும் கணக்குப் பிரிவின் செயற்பாடுகளைப் பரிசோதனை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் வேலைப் பகிர்வு மற்றும் அந்தந்த உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களைக் காண்பிக்கும் வகையில் நடைமுறைக் கையேடு (Procedure Manual) பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் தபால் கணக்குப் பரிசோதனை உத்தியோகத்தர்களில் 29 பேருக்கும் உதவி தபால் கணக்குப் பரிசோதகர்களில் 35 பேருக்கும் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை அப்பிரிவின் செயல் முன்னேற்றம் நலிவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

(ஈ) 2013 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரான வருடங்களிலும் விநியோகிக்கப்பட்ட எனினும், 2014 ஒக்தோபர் 07 ஆந் திகதியில் உள்ளவாறு விடையளிக்கப்படாத தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாத உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை 38 ஆகும்.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 01 | 01 வருடம் |
| | | 08 | கணிப்பிட முடியவில்லை |
| (ii) | இயந்திர அளவைகள் | 03 | 07 வருடங்கள் |
| | | 04 | 04 வருடங்கள் |
| | | 01 | 01 வருடம் |
| | | 359 | கணிப்பிட முடியவில்லை |
| (iii) | ஏனையவை | 24 | கணிப்பிட முடியவில்லை |

(ஆ) பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நி.பி 94(1) இன் படி நிதி ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புகள் ஏற்படுத்தப்பட முடியாத போதிலும் 11 செலவின விடயங்களில் ஒவ்வொரு செலவின விடயத்திற்கான நிதி ஏற்பாடு சேமிப்பினை விஞ்சி ரூபா 111,284,811 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்காக 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 13,016,745 பெறுமதியான பொறுப்புக்கள் பொறுப்புக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| (i) | VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | | மாதாந்த சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்களின் நாளொன்றுக்கான சம்பளம் ஒன்றிணைந்த மாதாந்த சம்பளத்தில் 1/30 பெறுமதியில் கணிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் மேலதிக நேரப்படி செலுத்தும் போது ஒன்றிணைந்த மாதாந்த சம்பளத்தில் 1/30 இற்கு மேலதிகமாக 25 சதவீத படியும் சேர்க்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | VIII ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவு | | ஏதாவது உத்தியோத்தருக்கு மாதமொன்றிற்கு 20 மணித்தியால எல்லையை விஞ்சி மேலதிக நேரப்படி செலுத்துவதற்கான அதிகாரத்தை வழங்குவதற்கு உரிய அமைச்சின் செயலாளருக்கு முடியுமாக இருந்த போதிலும் 20 மணித்தியாலயத்தை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற மேலதிக நேரத்திற்காக அமைச்சுச் செயலாளரின் |

| | | | |
|---|---|---|---|
| | | | அங்கீகாரம் பெறப்படாமலிருந்தமை இரண்டு அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (ஆ) | பொது நிருவாகச் சுற்றறிக்கை | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்கைகளைப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 40 இற்கும் அதிகமான ஊழியர் எண்ணிக்கையில் உள்ள மூன்று அலுவலகங்களில் அவ்வாறு கைவிரல் அடையாளத்தைப் பதியும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 6/2004 (1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 2,900,000 | ஹெவலக் நகரத்தில் முன்னாள் தபால் அதிபர் ரூபா 2.9 மில்லியனுக்கு மேற்பட்ட பண மோசடி செய்தமையின் காரணமாக தபால் சேவை செயலாளரின் 2013 சனவரி 30 ஆம் திகதிய MPS/ADM/3/12/37 ஆம் இலக்க கடிதத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை 04 ஆம் திகதிய சிரேஷ்ட நிருவாக செயலாளர் தலைமையகத்தின் கடிதத்தால் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.11 ஆம் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்ட முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். |

(இ) திறைசேரிச் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| 2012 யூலை 17 ஆந் திகதிய 1/2002 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | | மூம்மாத வருமான அறிக்கை அந்தக் காலப்பகுதி முடிவடைந்த திகதி தொடக்கம் 15 நாட்களுக்குள் அரசாங்க நிதி கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 06 நாட்கள் முதல் 48 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

(ஈ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படியும் தபால் மா அதிபரால் விநியோகிக்கப்பட்ட 2010 நவம்பர் 02 ஆந் திகதிய 19/16/தொலைபேசி/58 மற்றும் 2010 ஆம் இலக்க சுற்றறிக்கை | 160,389 | கடமைத் தொலைபேசிகளை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகத்தர்களிற்கு விதிக்கப்பட்டுள்ள எல்லையினை விஞ்சுகின்ற போது அந்த உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் அறவிட வேண்டியதாக அறிவிக்கப்பட்டிருந்தும் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய எல்லையை விஞ்சிய தொலைபேசிக் கட்டணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

(உ) தபால் மா அதிபரின் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| (i) 2007 யூலை 30 ஆந் திகதிய பீஎப்1/15/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | 105,235 | அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட தொலைபேசி வசதிகளை வழங்கும் போது வருடாந்த நிதி ஏற்பாட்டை விஞ்ச முடியாதிருந்த போதிலும் பொலன்னறுவை தபால் அலுவலகத்தால் அந்த எல்லையினை விஞ்சி விடுவிக்கப்பட்ட தொலைபேசி வசதி வழங்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) 2000 நவம்பர் 07 ஆந் திகதிய 14/2000 கணக்கு சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | ஒவ்வொரு மாத இறுதியிலும் கையில் எஞ்சிய இருப்பினது அளவின் பெறுமதியைக் காண்பிக்கின்ற முறையில் இருப்பு மீள் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின்படி 02 தொலைத் தொடர்புப் பிரிவுகள் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) மேற்படி- 7 ஆம் பந்தி | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் பரீட்சை மீதி, இலாப நட்டக் கணக்கு மற்றும் ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி 04 தொலைத் தொடர்பு இல்லங்கள் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) 2001 திசெம்பர் 01 ஆந் திகதிய பிரதி தபால் மா அதிபரின் திகி/கொள தெ.யொ/1/2001 ஆம் இலக்க கடிதம். | ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு தடவை பிரதேச தபால் அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழ் பௌதீக இருப்புக் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி 04 தொலைத் தொடர்பு பிரிவுகள் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2.7 செயலாற்றல்

------------------------

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) வருடாந்த வருமானம்

----------------------------------

தபால் திணைக்களத்தால் உழைக்கப்பட்ட வருமானம், செலவிடப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்து கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | 2012 | 2013 | அதிகரிப்பு/(குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வருமானம் | 4,952 | 5,907 | 19 |
| செலவினம் | 8,258 | 8,766 | 6.1 |
| செயற்பாட்டுப் பற்றாக்குறை | 3,306 | 2,859 | (13.5) |

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 955 மில்லியனால் அதாவது 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. செயற்பாட்டுப் பற்றாக்குறை 14 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. முத்திரை வருமானம், சர்வதேச தபால் வருமானம், மின்சாரப் பட்டியல் வருமானம், இருப்பு மற்றும் வியாபார தபால் வருமானம் என்பன உயர்வடைந்தமை இவ்வருமான அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

(ii) எவ்வாறாயினும், திணைக்களத்திற்கு நேரடியாகப் பங்களிக்கின்ற 04 வருமான விடயங்கள் அதாவது களஞ்சிய கட்டணம், கடுகதி தபால், கடிதங்கள் சேகரிப்புக் கட்டணம் மற்றும் தொலைத் தொடர்பு பிரிவுகளின் வருமானம் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 17 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தன.

(iii) 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்தின் நோக்கங்களில் தபால் திணைக்களத்தை தொடர்ச்சியாக நட்டம் பெறுவதைத் தடுத்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணிச் செல்வதே ஒரு நோக்கமாக இருந்தது. இருந்த போதிலும் திணைக்களம் மீளாய்வாண்டின் போது அடைந்திருந்த செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 2,859 மில்லியனாக இருந்தது.

(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) பத்தரமுல்ல தபால் அதிகாரப் பிரதேசத்தில் 70 அரசாங்க மற்றும் 28 தனியார் நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் அந்த அலுவலகங்களுக்குரிய கடிதங்களை பகிர்ந்தளிப்பதற்காக விஷேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த அலுவலகங்களுக்கும் சாதாரண தபால் அதிகாரப் பிரதேசங்களிற்கு கடிதங்கள் பகிர்ந்தளிக்கும் முறையில் கடிதங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அலுவலகங்களிற்கு தாமதத்துடன் கடிதங்கள் கிடைத்திருந்தன.

(ii) பத்தரமுல்ல தபால் அலுவலகத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்படுகின்ற கடிதங்கள் சில தினங்கள் தாமதத்துடன் இருந்தமை அவதானிக்கப்பட்டது. தபாற் காரர்களின் பற்றாக்குறையின் காரணமாக அவர்கள் விடுமுறை பெற்ற தினங்களில் கடிதங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

(iii) தபால் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற தபால் அலுவலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் ஏற்பட்ட மோசடிகள் தொடர்பாக பரீட்சித்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் யார் எனத் தீர்மானித்தல் புலனாய்வுப் பிரிவின் அடிப்படைச் செயற்பொறுப்பாக இருந்த போதிலும் இந்த நடவடிக்கைகள் மெதுவாக மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 04 தபால் அலுவலகங்களில் ஏற்பட்ட ரூபா 8,613,000 தொகையான மோசடிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் தற்போது 03 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலான காலதாமதத்துடன் மேற்கொள்ளப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iv) புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கையளிக்கப்பட்ட 200 சம்பவங்களுக்கிடையே அந்த சம்பவங்களில் 09 மாத்திரம் 2013 செப்தெம்பர் 05 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி பரிசோதனை பூர்த்தி செய்யப்படாத சம்பவங்களின் எண்ணிக்கை 191 ஆகும். இதன் காரணமாக திணைக்களத்தின் சொத்துக்களுக்கும் நன்மதிப்பிற்கும் ஏற்பட்ட இழப்பை மீள ஈடுசெய்வதற்கு முடியாமையினால் அது திணைக்களத்தின் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு இடையூறாக இருந்தது.

(இ) திட்டமிடல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 10 பழுதுபார்த்தல்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 63 விடயங்களில் பழுதுபார்த்தல்கள் மற்றும் அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக திட்டத்தில் உள்ளடக்கப்படாத 20 வேன் வண்டிகள் மற்றும் 20 துவிச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) தலைமை அலுவலகத்தின் கீழ் கட்டிடங்களின் புனரமைப்புச் செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக ரூபா 2.05 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் எவ்வாறானது என செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. செயல்முன்னேற்ற அறிக்கையின் படி ரூபா 16.988 மில்லியன் செலவிடப்பட்டு 32 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

(அ) சீராக்கப்பட வேண்டிய மீதி

தபால் திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | 03 வருடங்களுக்கு மேல் | |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | தேறாத வைப்புக்கள் | 152,878 | 276,586 | 500,100 | 929,564 |
| (ii) | விநியோகிக்கப்பட்டிருந்தும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 32,629 | 20,599 | 760 | 53,988 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 2,299 | 319 | 50,000 | 52,618 |
| (iv) | இனங்காணப்படாத செலவு | 4,066,640 | - | - | 4,066,640 |
| | | 4,254,446 | 347,504 | 500,860 | 5,102,810 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களைக் கடந்த பின்னரும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 53,988 பெறுமதியான 20 காசோலைகள் தொடர்பில் நி.பி 396 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்டக் கணக்கு அலுவலகங்களில் 06 நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் 06 மாதங்களைக் கடந்த பின்னரும் தேறாத ரூபா 929,564 பெறுமதியான 116 வைப்புக்கள் தேறாதிருந்தன.

(iii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 04 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 4,066,640 தொகையான பெறுவனவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 3,962,607 தொகை யாழ்ப்பாண மாவட்ட கணக்கு அலுவலகத்திற்குரியதாகும்.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 04 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 52,618 தொகையான வரவு மீதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. இனங்காணப்படாத வரவு மீதியில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட தொகை ரூபா 50,000 ஆகும்.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கண்டி ''கெண்டி சிட்டி சென்டர்'' தபால் கரும பீடத்தில் தாபிக்கப்பட்ட FR 0112 ஆம் இலக்க முத்திரையிடும் இயந்திரம் 2013 செப்தெம்பர் 14 ஆந் திகதி முதல் 2013 செப்தெம்பர் 28 வரையான காலத்தில் அனுமதியற்ற வகையில் தபால் அலுவலகத்திற்கு வெளியே எடுத்துச் சென்று பயன்படுத்தப்பட்டதற்கு உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்காணல் மற்றும் தபால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை கணிப்பிடுதல் தொடர்பான புலனாய்வு மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

## 2.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்கும் புறம்பாக செயற்பட்டமை

(அ) விமானத் தபால் சேவைக்காக ஒப்பந்தக்காரரொருவரைத் தெரிவு செய்தல்

(i) ஒப்பந்தக்கார கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் விமானத் தபால் சேவை அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் தெரிவு செய்யப்பட்ட அக்கம்பனி அப்பணியை நிறைவேற்றத் தவறியிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரர் உரிய சேவைகளை வழங்கத் தவறியமை தொடர்பாக அமைச்சரவைக்கு 2013 திசெம்பர் 09 ஆந் திகதியே அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி செயற்படாமையால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு ரூபா 20 மில்லியன் பெறுமதியையுடைய

செயலாற்றல் பிணைப் பொறுப்பின் மூலம் ஏற்பட்ட நிதி நட்டத்தை தீர்ப்பதற்கு 2014 சனவரி 03 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வரையும் அது அறவிடப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணைமுறி வங்கியின் மூலம் திணைக்களத்திற்குச் செலுத்துவதற்கு எதிராக தடை உத்தரவொன்றை அந்த நிறுவனம் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொண்டமையால் அத்தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(iii) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.11.4 மற்றும் 8.11.5 ஆம் பந்திகளின் படி ஒப்பந்தத்தைப் புறக்கணித்த காரணத்தால் ஒப்பந்தக்காரரின் பெயரை கறுப்புப் பட்டியலிடல் 2014 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்னார் சுற்றுலா விடுதியை புனரமைத்தல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றுலா விடுதியை புனரமைப்பதற்காக செயலாற்றல் பிணை முறியொன்று 2012 திசெம்பர் 01 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை கொள்வனவு கடிதம் மூலம் ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரால் செயலாற்றல் பிணைமுறி 2013 சனவரி 21 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தம் கையளித்தல் கடிதத்தின் படி நிர்மாண நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 சனவரி 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் உரிய நிர்மாணங்கள் தொடர்பான உடன்படிக்கை 2013 சனவரி 27 ஆந் திகதியே கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iii) புனரமைப்பு நடவடிக்கைகள் 2014 சனவரி 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த உடன்படிக்கையின் 6.4 ஆம் பந்தியின் படி தாமதமான நாளொன்றுக்கு ரூபா 5,825 படி ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத உச்ச அளவின் கீழ் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) செயலாற்றல் பிணைமுறியின் காலம் 2013 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும் செயலாற்றல் பிணைமுறியின் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது 2006 இன் தேசிய

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8(b) பிரிவின் ஏற்பாட்டை மீறியதாகும்.

(இ) அனுராதபுரம் தபால் தொகுதிக் கட்டிடத்தை நிர்மாணித்தலும் அவிஸ்ஸாவெல்ல தபால் அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தலும்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த நிர்மாணங்கள் தபால் திணைக்களத்தால் கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்களுக்குரிய தபால் திணைக்களத்திற்கும் கட்டிடத் திணைக்களத்திற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களின் திட்டம் மற்றும் மதிப்பீடுகள் தபால் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த ஒப்பந்தத்திற்காக கட்டிடத் திணைக்களம் வெளி ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iv) ரூபா 90,544,820 தொகையான நிதியத்தை விடுவிக்கும் போது ஆற்றப்பட்ட வேலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிதி விடுவிக்கப்படாமையால் விடுவிக்கப்பட்ட நிதியின் அளவிற்கு ஒப்பீடாக செய்யப்பட்ட வேலையின் அளவு மேற்கொள்ளப்பட்டதா என பரிசீலனை செய்ய முடியாதிருந்தது.

(v) இந்த நிர்மாணங்கள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) இன் கீழ் இலங்கை ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவை ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதிக் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 11,736,772 பெறுமதியான 05 ஒப்பந்தங்களுக்காக அவ்வாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) முல்லைத்தீவு தபால் அதிபரால் ரூபா 1,663,965 பணம் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டமை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தர் தொடர்பில் திணைக்களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போலியாக தயாரிக்கப்பட்ட இரண்டு இடர் கடன் உறுதிச்சீட்டுக்களைப் பயன்படுத்தி ரூபா 290,000 பண மோசடி களுத்துறை மாவட்டக் கணக்கு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.12 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இராஜகிரிய மற்றும் ஹெவலொக் நகரம் போன்ற தபால் அலுவலகங்களில் தொலைத் தொடர்பு சேவையொன்று அமுல்படுத்தப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மாலபே தபால் அலுவலகத்தில் இரண்டு தொலைத் தொடர்பு பிரிவில் விற்பனை தொடர்பாக எவ்வித குறிப்பும் தபால் அதிபரால் இடப்படாமையின் காரணமாக நாளாந்த மொத்த வருமானமொன்று தொலைத்தொடர்பு பிரிவு வருமானமாக மாவட்டக் கணக்கு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(இ) களுத்தறை தபால் அலுவலகத்தின் மூலம் உப தபால் அலுவலகங்களுக்கு பணம் அனுப்பும் போது தபால் உறைக்குள் பணக் கொள்கலனில் போக்குவரத்திற்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு தபால் உறைகள் கையளிக்கப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. பிரதான தபால் அலுவலகத்திலிருந்து உப தபால் அலுவலகங்களுக்கு பணம் அனுப்புவதற்காக மிகவும் பாதுகாப்பான முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முறைமையொன்று தபால் திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 555,000 தொகை பேரூந்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 4,650,000 பெறுமதியான 93 தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள் 2010 ஆம் ஆண்டு முதல் மீளவும் களுத்துறை தபால் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) களுத்துறை மாவட்டக் கணக்கு அலுவலகத்தில் மேலதிக நேரக் கணிப்பு கணிப்பீடு செய்யும் போது நேரப் பதிவு இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்கைக்குரிய தகவல்கள் அடிப்படையாகக் கொள்ளப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தத்தமக்கு விருப்பமான நேரத்தைக் குறிப்பிட்டு மேலதிக நேரக் கணிப்பு கணிப்பிடப்பட்டு பணம் கோரப்பட்டிருந்ததுடன் அவைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) அலுவலக நடவடிக்கைகள் பிரதேச தபால் அத்தியட்சகர்களின் மேற்பார்வைக்கு தொடர்ச்சியாக உள்ளாக்கப்பட வேண்டிய போதிலும் பொரளை தபால் அலுவலகம் 2013 ஆம் ஆண்டின் சனவரி முதல் செப்தெம்பர் மாதம் வரை ஒரு நாளேனும் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தபால் அலுவலகத்திற்காக வழங்கப்பட்ட முத்திரை எல்லையினை விஞ்சிய மிகையான முத்திரை இருப்பு பேணப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தபால் அலுவலகம் | கணக்காய்விற்கு உட்படுத்திய காலம் | முத்திரை எல்லை | மிகையான முத்திரை எல்லை |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| பத்தரமுல்ல | 2013 ஆகஸ்ட் 10 முதல் செப்தெம்பர் 07 வரை | 1,800,000 | 17,260,920 |
| களுத்துறை | 2013 ஆகஸ்ட் மாதம் | 2,100,000 | 4,709,325 |
| பொரளை | 2013 ஆகஸ்ட் 10 முதல் செப்தெம்பர் 10 வரை | 5,000,000 | 29,967,570 |
| கம்பஹா | 2013 செப்தெம்பர் | 8,500,000 | 3,182,345 |

(ஏ) தபால் அலுவலகத்திற்காக வழங்கப்பட்ட பணம் கட்டுநிதி எல்லையினை விஞ்சி மிகைப் பணம் பேணப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தபால் அலுவலகம் | கணக்காய்விற்கு உட்படுத்திய காலம் | கட்டுநிதி எல்லை | மிகை |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| பத்தரமுல்ல | 2013 ஆகஸ்ட் 10 முதல் செப்தெம்பர் 07 வரை | 150,000 | 12,303,000 |
| களுத்துறை | 2013 ஆகஸ்ட் மாதம் | 450,000 | 6,891,450 |
| பொரளை | 2013 ஆகஸ்ட் | 1,500,000 | 3,478,451 |
| கம்பஹா | 2013 செப்தெம்பர் | 450,000 | 14,545,465 |

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 121 | 78 | 43 |
| மூன்றாம் நிலை | 147 | 68 | 79 |
| இரண்டாம் நிலை | 8,854 | 7,804 | 1,050 |
| ஆரம்ப நிலை | 12,871 | 12,162 | 709 |
| ஏனையவை(அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 4,788 | 4,788 | - |
| மொத்தம் | 26,781 | 24,900 | 1,881 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1,881 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

(ஆ) பத்தரமுல்ல தபால் அலுவலகத்தற்குரிய கடிதங்களைப் பகிர்ந்தளிக்கின்ற 20 வலயங்களுக்காக 20 தபால்காரர்கள் அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 14 தபாற்காரர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தனர். அலுவலகத்தின் தேவையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.